## அரையாண்டுத்தேர்வு - மாதிரி வினாத்தாள் --- 2 ( டிசம்பர் - 2019 )

**மேல்நிலை முதலாம் ஆண்டு**

**வணிகவியல்**

**நேரம் : 15 நிமிடங்கள் + 3.00 மணி** **மதிப்பெண் : 90**

**பகுதி ---- I**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 20 × 1 = 20

1. வணிகம் என்பது எதனை உள்ளடக்கியது?
   அ) பொருட்களை அளித்தல் ஆ) பொருட்கள் விலையிடல்
   இ) பொருட்களை கொள்முதல் மற்றும் விற்பனை செய்தல் ஈ) பொருட்களை தயாரித்தல்

2. கீழ்க்கண்டவற்றில் எது பழமையான வியாபார அமைப்பு வடிவம்?
   அ) தனியாள்வணிகம் ஆ) கூட்டாண்மை இ) கூட்டுறவு சங்கம் ஈ) நிறுமம்

3. கூட்டாண்மை உண்டாக்கப்படுவது -------------
   அ) ஒப்பந்தத்தால் ஆ) கூட்டாளிகளிடையே உறவு
   இ) அரசின் வழிகாட்டல் ஈ) நட்பின் அடிப்படையில்

4. நிறுமத்தின் இயக்குநரை கீழகண்டவற்றுள் யார் தேர்ந்தெடுக்கிறார்கள்?
   அ) கடனீந்தோர் ஆ) கடனாளர் இ) கடனீட்டு பத்திரதாரர் ஈ) பங்குதாரர்கள்

5. இராபர்ட் ஒவென் எப்போது கூட்டுறவு இயக்கத்தை ஆரம்பித்தார்?
   அ) 1944 ஆ) 1884 இ) 1844 ஈ) 1984

6. கீழ்கண்டவற்றில் எவை சரியான கூற்று அல்ல?
   அ) ஒவ்வொரு நாட்டுக்கும் ஒரு மைய வங்கி உள்ளது.
   ஆ) ஆனால், இது நாட்டின் அரசாங்கத்திற்குச் சொந்தமானது அல்ல
   இ) ஒரு நாட்டின் அனைத்து வங்கிகளின் செயல்பாடுகளை கட்டுப்படுத்தும் அதிகாரம் இந்த உச்ச வங்கியிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது.
   ஈ) மைய வங்கிகள் வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறு பெயர்களால் அழைக்கப்படுகின்றன.

7. கடன்பத்திரதாரர்கள் ஒரு நிலையான ---------------- விகிதம் பெறத் தகுதியுடையவர்கள்
   அ) பங்காதாயம் ஆ) இலாபம் இ) வட்டி ஈ) இவை எதுவும் இல்லை

8. பண்டக காப்பகம் ------------ மையமாக பொருட்களை வைத்திருக்கிறது.
   அ) சந்தையிடுதல் ஆ) வரிசைப்படுத்துதல். இ) விநியோகம் ஈ) விற்பனை செய்தல்.

9. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களின் ஆயுளுக்கு கூட்டாக, ஆயுள்காப்பீடு செய்வது ----------- திட்டாவணம் எனப்படும்.
   அ) முழு ஆயுள் ஆ) குறிது வயது இ) கூட்டு ஆயுள் காப்பீடு ஈ) ஆண்டுத்தொகை

10. மின்னணு வலைப்பின்னல்கள் மூலம் பொருட்களை வாங்குதல் மற்றும் விற்பனை செய்தல் ----------- என அளிக்கப்படுகிறது.
    அ) மின்னணு வணிகம் ஆ) இணையதளம் இ) வலைத்தளம் ஈ) வர்த்தகம்

11. எந்த வகையான பொறுப்புணர்வு சமுதாயத்திற்கு நன்மை தரத்தக்கதாக உள்ளது ?
    அ) சட்டம் ஆ) நெறிமுறை இ) ஒழுங்குணர்வு ஈ) பொருளாதாரம்

12. நெறிமுறைகளுக்கான தேவைகள் -------------
    அ) உயர்மட்ட மேலாண்மை ஆ) நடுத்தர அளவிலான மேலாளர்கள்
    இ) மேலாண்மையில் இல்லாத தொழிலாளர்கள் ஈ) மேற்கண்ட அனைத்தும்

13. ----------- என்பது ஏட்டு கடனை விற்று அல்லது அதனை அடகு வைத்து நிதி திரட்டும் ஒரு முறையாகும்.
    அ) கடன் வதூல் முகைமை ஆ) அடமானம்
    இ) தூய கடன் ஈ) வாடகை கொள்முதல் நிதி

14. நிலைச்சொத்துக்களை வாங்க ------------ ஐ பயன்படுத்துவது சிறந்த தேர்வாக இருக்கும்.
    அ) கடனீந்தோர் ஆ) நீண்டகாலக் கடன்கள்
    இ) வங்கி மேல்வரைப்பற்று ஈ) உண்டியலை வட்டம் செய்தல்

15. உலகம் முழுவதும் மாற்றக்கூடிய இரசீது --------------
    அ) அமெரிக்க வைப்பு இரசீது ஆ) உலகளாவிய வைப்பு இரசீது
    இ) வைப்பு ரசீது ஈ) பன்னாட்டு இரசீது

16. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் மேம்பாட்டு சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு ----------------
    அ) 2004 ஆ) 2007 இ) 2006 ஈ) 2008

17. பொருத்துக
    1. உள்நாட்டு வியாபாரம் ---- a. சீனப் பொருட்கள் இந்தியாவிலும் விற்பனை
    2. பன்னாட்டு வியாபாரம் ---- b. வளைகுடா நாடுகளிலிருந்து பெட்ரோலியம் வாங்குதல்
    3. ஏற்றுமதி வியாபாரம் ----- c. காஷ்மீர் ஆப்பிள் தமிழ்நாட்டில் விற்பனை
    4. இறக்குமதி வியாபாரம் ---- d. மதுரை மல்லிகையை சிங்கப்பூருக்கு அனுப்புதல்

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| அ. | c | d | a | b |
| ஆ. | d | c | a | b |
| இ. | c | b | a | d |
| ஈ. | c | a | d | b |

18. EPC இன் விரிவாக்கம் ---------
    அ) ஏற்றுமதி செயல்முறை குழு
    ஆ) ஏற்றுமதி வளர்ச்சிக் குழு
    இ) ஏற்றுமதி சரக்கு ஏற்றி குழு
    ஈ) ஏற்றுமதி வளர்ச்சி காங்கிரஸ்


B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

19. உலக வங்கி அமைந்திருப்பது ------------

அ) வாஷிங்டன் DC    ஆ) நியூயார்க்    இ) டோக்கியோ    ஈ) ஹாங்காங்

20. ஒரு வருடத்தில் ஒரு நாட்டின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி மதிப்புகளுக்கு இடையிலான நிகர விளைவை குறிப்பது ----------

அ) வாணிப சமநிலை    ஆ) செலுத்தல் சமநிலை

இ) கணக்கியல் அறிக்கை    ஈ) மேற்கண்ட அனைத்தும்

## பகுதி --- II

எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண் 30 - க்கு கட்டாயம் விடையளிக்கவும். $7 \times 2 = 14$

21. வணிகம் பொருள் தருக.
22. போக்குவரத்து - வரையறு.
23. பன்னாட்டு வணிகம் என்பதன் பொருள் யாது?
24. சிறப்புப் பண்டகச்சாலைகள் என்றால் என்ன?
25. சில்லறை வியாபாரம் என்றால் என்ன?
26. மருத்துவக் காப்பீடு என்றால் என்ன ?
27. சுய உதவி குழு என்றால் என்ன?
28. அடகு கடன் என்றால் என்ன?
29. நெறிமுறை என்றால் என்ன?
30. இயல் பொருட்களை உற்பத்தி செய்யாமல், சேவைப் பொருட்களை இலாபத்திற்கு விற்பனை செய்யப்படும் தொழில்கள் யாது? உதாரணம் தருக.

## பகுதி --- III

எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண் 40- க்கு கட்டாயம் விடையளிக்கவும். $7 \times 3 = 21$

31. பிரித்தெடுக்கும் தொழிற்சாலை மற்றும் மரபுத் தொழிற்சாலையை வேறுபடுத்துக
32. தனியாள் வணிகத்தின் மூன்று பண்புகளை விவரி.
33. தகவலறிக்கை என்றால் என்ன?
34. பண்டக சான்றாணை மற்றும் பண்டக இரசீது இடையே மூன்று வேறுபடுகளை கூறுக.
35. பயிர்க் காப்பிட்டின் பொருள் தருக.
36. வணிக முகவர்களின் வகைகள் யாவை?
37. சிறப்பங்காடிகளின் சிறப்பியல்புகளை விளக்கு.
38. கப்பல் ரசீதிற்கும் கப்பல் வாடகை முறிக்கும் உள்ள வேறுபாடுகளை எழுதுக.
39. மூலதன கணக்கின் உள்ளடக்கங்கள் யாவை?
40. சரக்கை ஏற்றுமதி செய்வதற்கான ஒரு ஆதாரம் எது? அதன் வகைகளில் இரண்டினை குறிப்பிடுக.



## பகுதி --- IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். $7 \times 5 = 35$

41. பண்டமாற்று வணிகத்தின் தடைகள் யாவை? ( ஏதேனும் ஐந்து )

( அல்லது )

மொத்த வியாபாரியின் பணிகள் ஏதேனும் ஐந்து எழுதுக.

42. புற ஒப்படைப்பின் நன்மைகளை விவரிக்கவும்

( அல்லது )

காப்பீட்டின் கோட்பாடுகளை விவரி.

43. சுய உதவி குழுக்களின் நோக்கங்கள் யாவை?

( அல்லது )

கூட்டுறவின் கொள்கைகள் என்ன?

44. உள்நாட்டு வணிகத்திற்கும் பன்னாட்டு வணிகத்திற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை

( அல்லது)

கூட்டாளிகளின் வகைகளில் ஏதேனும் ஐந்து எழுதுக.

45. உற்பத்தித் தொழில், வணிகம் மற்றும் வியாபாரம் - ஓர் ஒப்பீடு செய்க ( ஏதேனும் 5 )

( அல்லது)

ஏட்டுக்கடன் முகமையின் சிறப்பம்சங்களை தெளிவுபடுத்துக

46. தனியாள் வணிகத்தின் பண்புகள் யாவை? ( ஏதேனும் 5 )

( அல்லது)

ஏற்றுமதி வணிகத்தில் பயன்படுத்தப்படும் ஆவணங்களை பற்றி விளக்கி எழுதுக.

47. வணிக வங்கிகளின் பல்வேறு வகையான இரண்டாம் நிலை செயல்பாடுகளை விளக்குக.

( அல்லது)

வெளிநாட்டு வியாபாரத்தின் பல்வேறு வகைகளை விளக்குக.